# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2331/54 - 2023 මැයි මස 12 වැනි සිකුරාදා - 2023.05.12

2331/54 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/WM/LND/2/5/AQUIS/24.
காணி அமைச்சின் இல.: 4-3/8/2018/PC/75.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில் தம்பவிண்ண பலாத கோறளையின் சிறு பிரிவில் தம்பவிண்ண (59ஏ) கிராம அலுவலர் பிரிவின் பதுளை நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 710510, தொகுதி இல. 01, தாள் இல. 01 மற்றும் 2022.12.29 ஆந் திகதி கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 0.8094 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழே காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரங்கள்:

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : அம்பிடிகொட பதன; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம் ஒன்று உண்டு; உரிமை கோருவோர்: காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு; விஸ்தீரணம் : 0.8094 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக கீழே குறிப்பிடப் பட்டுள்ள திகதியில் அக்காணித் துண்டு சம்பந்தமாக கீழே தீர்மானிக்கப்பட்டுள்ள நேரத்தில் வெலிமடை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| திகதி | துண்டு இலக்கம் | நேரம் |
| --- | --- | --- |
| 2023.06.28 | 01 | மு.ப. 10.00 |

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

டப்.எம்.சீ. வீரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2023, மே 09.

EOG 05 - 0083